# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2065/38 - 2018 අප්‍රේල් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.04.05

*2065/38 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 6/2017*

**2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம்**

*2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் பிரிவுகள் 11(1) (ஆ), 17(2) மற்றும் 31(ஈ), (உ), (ஊ), (எ) மற்றும் (ஏ) உடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 117(2) (ஐ) ஆம் பிரிவின்கீழ் குடியியல் வான் சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நிமல் சிறிபால டி சில்வா,
போக்குவரத்து மற்றும் குடியியல் வான் சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2018, ஏப்பிறல் 02.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க குடியியல் வான்செலவு காப்பு முகாமை ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

**அரச காப்பு நிகழ்ச்சித்திட்டம்**

2. (1) அதிகாரசபை, வானூர்திகளின் காப்பான தொழிற்பாட்டு நோக்கத்துக்காக (இதனகத்துப்பின்னர் "சகுவாஒ" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சர்வதேச குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்பின் நியமங்களுக்கு இணங்க (இதனகத்துப்பின்னர் "அகாநி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரச காப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தாபித்தலும் பேணுதலும் வேண்டும்.

(2) அதிகாரசபை, (இதனகத்துப்பின்னர் "காமுமு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) காப்பு முகாமைத்துவ முறைமையொன்றைக் கொண்டுள்ள உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநர் ஒருவர் ஓர் அகாநி இன்கீழ் அதனது பணிகளையும் கடமைகளையும் எந்தத் தேவைப்பாடுகளுக்கு இணங்கவும் எந்தச் சூழ்நிலைகளிலும் நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப்படுகின்றதோ அந்த தேவைப்பாடுகளையும் சூழ்நிலைகளையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபை, அகாநி தொடர்பான தொழிற்பாட்டு ஒழுங்குவிதிகளைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(4) (இதனகத்துப்பின்னர் பணிப்பாளர் தலைமையதிபதி எனக் குறிப்பீடு செய்யப்படும்) குடியியல் வான்செலவு பணிப்பாளர் தலைமையதிபதி–

(அ) அரச காப்புக் கொள்கை, குறிக்கோள்கள் மற்றும் வளங்கள் ;
(ஆ) அரச காப்பு அபாய முகாமை ;
(இ) அரச காப்பு உறுதிப்பாடு ; அத்துடன்
(ஈ) அரச காப்பு மேம்பாடு,

போன்றவற்றை அமுல்படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அகாநி இனை அமுல்படுத்தும் நோக்கத்துக்காக இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டவாறு மேலுள்ளவை தொடர்பில் உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநர் ஒருவருக்கு பணிப்புரைகளை வழங்குதலும் வேண்டும்.

**சேவை வழங்குநர் ஒருவரின் காப்பு முகாமைத்துவ முறைமை**

3. பணிப்பாளர் தலைமையதிபதி, அகாநி இற்கு பயன்கொடுத்தல் மற்றும் அதனுடன் சேவை வழங்குநர் ஒருவரின் இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக–

(அ) காப்பு முகாமைத்துவ முறைமையொன்றை தாபிப்பதற்கும் பேணுவதற்கும் சேவை வழங்குநர் ஒருவரை தேவைப்படுத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) காமுமு இன் தொழிற்பாடுகளை காலத்துக்குக்காலம் கண்காணித்தலும் பார்வையிடுதலும் வேண்டும்.

4. காமுமு–

(அ) அத்தகைய சேவை வழங்குநரின் அளவுக்கும் அதன் வான்செலவுத் திட்டங்கள் அல்லது சேவைகளின் பல்புடைத்துவத்தை ஒத்திசைவதாகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) வழங்கப்படவேண்டிய அல்லது நிறைவேற்றப்படவேண்டிய சேவை அல்லது தொழிற்பாடுகளின் வகையை அனுசரிப்பதாதல் வேண்டும் ;

(இ) அமுல்படுத்தும் திட்டமொன்றை உள்ளடக்குதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) சகுவாஒ இன் மூலம் தரப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அல்லது சமவாயத்திற்கான இணைப்பு 19 இல் தரப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இசைந்ததாதல் வேண்டும்.

5. பணிப்பாளர் தலைமையதிபதி, அகாநி இன் பயனுள்ள அமுல்படுத்துகைக்கென அமுல்படுத்துகை நியமங்களுக்கான வழிகாட்டுநெறிகளையும் கைந்நூல்களையும் வழங்கலாம்.

**தரவு சேகரிப்பு மற்றும் செய்முறைப்படுத்தல் முறைமை**

6. (1) அதிகாரசபை, காப்புத்தரவு மற்றும் காப்புத் தகவலை பகுப்பாய்வு செய்யும் நோக்குடன் அவற்றை பற்றுவதற்கும், தேக்கிவைப்பதற்கும் சேகரிப்பதற்கும் அகாநி இன் காப்புத் தரவுச் சேகரிப்பு மற்றும் செய்முறைப்படுத்தல் முறைமையொன்றைத் (காதசேசெமு) தாபித்தலும் பேணுதலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, இதற்கான அட்டவணை II இல் தரப்பட்டவாறு காதசேசெமு இன் அமுல்படுத்துகைக்கான தேவைப்பாடுகளையும் நடவடிக்கை முறையையும் குறித்துரைத்தல் வேண்டும்.

**பொருள்கோடல்**

7. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக–

“அதிகாரசபை” என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டம் மூலம் தாபிக்கப்பட்ட இலங்கை குடியியல் வான்செலவு அதிகாரசபை எனப் பொருள்படும் ;

“சேவை வழங்குநர்” என்பது, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டத்தின் பிரிவு 6 இன்கீழ் நியமிக்கப்பட்ட சேவை வழங்குநர் ஒருவர் எனப் பொருள்படும் என்பதுடன் காமுமு ஒன்றை அமுல்படுத்துவதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட உருவகத்தையும் உள்ளடக்கும் ;

"நியமங்கள்" என்பது, சர்வதேச குடியியல் வான்செலவு மீதான சமவாயத்தின் 38 ஆம் உறுப்புரையின்கீழ் நியமங்களுக்கு வேறுபாடொன்றை இலங்கை கோப்பிடாது சமவாயத்தின் உறுப்புரை 37 இன்கீழ் சர்வதேச குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்புப் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களும் இலங்கையில் முறையாக அமுலாக்கப்பட்டு வலுவுறுத்தப்படுகின்ற சமவாயத்தின் உறுப்புரை 37 இன்கீழ் சர்வதேச குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்புப் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதந்துரைக்கப்பட்ட வழக்கங்கங்களும் எனப் பொருள்படும்.

8. 2014 ஆம் ஆண்டின் ஒற்றோபர் 3 ஆந் திகதிய 1882/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குடியியல் வான்செலவுக் காப்பு நிர்வாக ஒழுங்குவிதிகள், அதன்கீழ் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் ஒழிக்கப்படுகின்றது.

## அட்டவணை I

அரச காப்பு அபாய முகாமை

**உரிமமளித்தல், சான்றுப்படுத்துகை, அதிகாரமளித்தல் மற்றும் அங்கீகாரமளித்தல் கடப்பாடுகள்.**

அ (1) பணிப்பாளர் தலைமையதிபதி, உருவகங்கள் தொடர்பில் உரிமமளித்தல், சான்றுப்படுத்துகை, அதிகாரமளித்தல் மற்றும் அங்கீகாரமளித்தல் கடப்பாடுகள், பின்வருவன தொடர்பாக பின்னிணைப்பு 19 இல் உள்ள ஏற்புடையற்பாலதான ஏற்பாடுகளுக்கு இணங்க ஆற்றப்படுகிறது எனத் தம்மைத் திருப்திப்படுதல் வேண்டும் :-

(அ) சமவாயத்திற்கான பின்னிணைப்பு I இற்கு இணங்க அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி ஒழுங்கமைப்புகள் ;

(ஆ) முறையே சமவாயத்திற்கான பின்னிணைப்பு 6, பாகம் I அல்லது பாகம் III, பிரிவு II இற்கு இணங்க, சர்வதேச வர்த்தக வான் போக்குவரத்தை நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆகாய விமானங்களை அல்லது உலங்கு வானூர்திகளை தொழிற்படுத்துவோர் ;

**குறிப்பு**.- பேணுகைச் செயற்பாடுகள், பின்னிணைப்பு 6, பாகம் I இற்கு இணங்க அங்கீகாரமளிக்கப்பட்ட பேணுகை ஒழுங்கமைப்பொன்றினால் நடாத்தப்படாதபோது, ஆனால் பின்னிணைப்பு 6, பாகம் I அல்லது பாகம் III, பிரிவு II இல் உள்ளவாறு சமமான முறையொன்றின்கீழ், அவை காமுமு தொழிற்படுத்துபவரின் நோக்கெல்லையினுள் உள்ளடக்கப்படுகிறது.

(இ) முறையே பின்னிணைப்பு 6, பாகம் I அல்லது பாகம் III, பிரிவு II இற்கு இணங்க, சர்வதேச வர்த்தக வான் போக்குவரத்தில் ஈடுபடும் ஆகாய விமானங்களை அல்லது உலங்கு வானூர்திகளைத் தொழிற்படுத்துவோர்களுக்கு சேவைகளை வழங்கும் அதிகாரமளிக்கப்பட்ட பேணுகை ஒழுங்கமைப்புகள் ;

(ஈ) பின்னிணைப்பு 8 இற்கு இணங்க வானூர்தி, என்ஜின்கள் அல்லது காற்றாடிகளின் வகை, வடிவமைப்பு அல்லது உற்பத்திக்குப் பொறுப்பான ஒழுங்கமைப்புகள் ;

(உ) பின்னிணைப்பு II இற்கு இணங்க வான் நடமாட்டச் சேவைகள் (வாநசே) வழங்குநர்கள் ; அத்துடன்

(ஊ) பின்னிணைப்பு 14, கோப்பு I இற்கு இணங்க சான்றுப்படுத்தப்பட்ட வானூர்தி நிலையங்களின் தொழிற்படுத்துநர்கள்.

(அ) (2) பணிப்பாளர் தலைமையதிபதி, சேவை வழங்குநர்கள் மற்றும் தொழிற்படுத்துநர்களினால் தாபிக்கப்பட்ட காப்பு செயல்நிறைவேற்றுகைச் சுட்டிகள் மற்றும் இலக்குகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவுள்ளது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(அ) (3) இலங்கை பதிவக அரசாகவுள்ளபோது, பணிப்பாளர் தலைமையதிபதி, காமுமு ஒன்றினை அமுல்படுத்துவதற்கு பின்னிணைப்பு 6 பாகம் II, பிரிவு 3 இற்கு இணங்க பாரிய அல்லது பீற்றுவளிச் சுழலி ஆகாய விமானங்களின் சர்வதேச பொது வான்செலவு தொழிற்படுத்துவோர்க்கான கட்டளைக் கற்கைகளைத் தாபித்தல் வேண்டும்.

(அ) (4) இலங்கை பதிவுசெய்யப்பட்ட வானூர்தி தொடர்பில் தாபிக்கப்பட்ட கட்டளைக்கற்கைகள், பணிப்பாளர் தலைமையதிபதியினால் வெளியிடப்பட வேண்டிய அமுலாக்கும் நியமங்களில் உள்ளடக்கப்பட்ட காமுமு கட்டுக்கோப்பு மற்றும் அம்சங்களை எடுத்துரைத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- சர்வதேச பொது வான்செலவு தொழிற்படுத்துவோர்க்கான காமுமு ஒன்றினை அமுல்படுத்துவதற்கு கட்டளைக்கற்கைகளைத் தாபிக்கும் வழிகாட்டுகை, காப்பு முகாமைத்துவ கைந்நூலில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

**விபத்து மற்றும் சம்பவம் பற்றிய புலனாய்வு**

இலங்கையில் காப்பு முகாமைக்கு ஆதரவாக சமவாயத்திற்கான பின்னிணைப்பு 13 இற்கு இணங்க விபத்துக்களையும் சம்பவங்களையும் புலனாய்வு செய்வதற்கு ஆன செய்முறையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

**ஆபத்தை அடையாளங்காணுதல் மற்றும் காப்பு அபாய முகாமை**

(ஆ) (1) பணிப்பாளர் தலைமையதிபதி, சகுவாஒ இனால் எடுத்துரைக்கப்பட்டவாறு சேகரிக்கப்பட்ட காப்புத் தரவிலிருந்து ஆபத்துக்களை அடையாளம் காணுவதற்கு செய்முறையொன்றைத் தாபித்தலும் பேணுதலும் வேண்டும்.

(ஆ) (2) பணிப்பாளர் தலைமையதிபதி, அடையாளம் காணப்பட்ட ஆபத்துக்களுடன் இணைந்த காப்பு அபாயங்களின் மதிப்பீட்டை உறுதிப்படுத்தும் செய்முறையொன்றை அபிவிருத்தி செய்தலும் பேணுதலும் வேண்டும்.

**காப்பு அபாயங்களின் முகாமைத்துவம்**

பணிப்பாளர் தலைமையதிபதி, பின்னிணைப்பு 19 இல் உள்ள இயைபான ஏற்பாடுகளுக்கிணங்க காப்பு பற்றிய பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தற்காக அமைப்பு முறைகளைத் தாபித்தல் வேண்டும்.

பணிப்பாளர் தலைமையதிபதி, காப்பு அபாயங்களை முகாமை செய்வதற்கு செய்முறையொன்றை அபிவிருத்தி செய்தலும் பேணுதலும் வேண்டும்.

**குறிப்பு 1** : காப்பு அபாயங்களை முகாமைசெய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள், ஏற்றுக்கொள்ளல், தணித்தல், தவிர்த்தல் அல்லது மாற்றுதலை உள்ளடக்கலாம்.

**குறிப்பு 2** : காப்பு அபாயங்கள் மற்றும் காப்பு பற்றிய பிரச்சினைகள் கவனமாக மதிப்பிடப்பட வேண்டிய அடிப்படைக் காரணிகளை அநேகமாகக் கொண்டிருக்கும்.

**அரச காப்பு உறுதிப்பாடு**

**கண்காணிப்புக் கடப்பாடுகள்**

(இ) (1) பணிப்பாளர் தலைமையதிபதி, கண்காணிப்பு கடப்பாடுகள் பற்றி (அ) (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட உருவங்களின் செயல் நிறைவேற்றுகை பற்றி பின்னிணைப்பு 19 இல் உள்ள இயைபான ஏற்பாடுகளுக்கு இணங்க அனுசரிக்கப்படுகிறது எனத் தம்மைத் திருப்திப்படுதல் வேண்டும்.

**குறிப்பு**.- பந்தி (அ) (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட உருவங்களின் மேலான கண்காணிப்பு, காப்புச் செயல் நிறைவேற்றுகையையும் அவைகளின் வான்செலவுத் திட்டங்கள் அல்லது சேவைகளின் அளவு மற்றும் பல்புடைத்துவத்தையும் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(இ) (2) பணிப்பாளர் தலைமையதிபதி, பெருமளவிலான காப்பு அக்கறை அல்லது தேவைப்பாடு வேண்டியவிடத்து அத்துறைகளில் பரிசோதனைகள், கணக்காய்வுகள் மற்றும் ஆய்வுகளுக்கு முன்னுரிமையளிப்பதற்கு ஆன நடவடிக்கை முறைகளைத் தாபித்தல் வேண்டும்.

**குறிப்பு** : ஒழுங்கமைப்புசார் அபாய தோற்றங்கள், ஆபத்து அடையாளங்காணல் மற்றும் அபாய மதிப்பீட்டின் பெறுபேறுகள் மற்றும் கண்காணிப்புப் பெறுபேறுகள், பரிசோதனைகள் கணக்காய்வுகள் மற்றும் ஆய்வுகளுக்கு முன்னுரிமையளிப்பதற்கான தகவலை வழங்கலாம்.

(இ) (3) பணிப்பாளர் தலைமையதிபதி, பந்தி (அ) (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட உருவமொன்றின் காப்பு செயல் நிறைவேற்றுகையைக் காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்தல் வேண்டும்.

***அரச காப்பு செயல் நிறைவேற்றுகை***

*(ஈ) (1) பணிப்பாளர் தலைமையதிபதி, அகாநி ஊடாக எய்தப்படவேண்டிய ஏற்றுக்கொள்ளத்தக்க காப்பு செயல்நிறைவேற்றுகை மட்டமொன்றைத் தாபித்தல் வேண்டும் :*

***குறிப்பு** : இலங்கைக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க காப்பு செயல் நிறைவேற்றுகை மட்டமொன்று, அகாநி இனதும் ஏலவேயுள்ள காப்பு தொடர்பான நிவிசெ இனை அமுல்படுத்துவதன் அடிப்படையில் காப்பானது பயனுள்ள வகையில் முகாமை செய்யப்படுகின்றது மற்றும் கட்டியமைக்கப்படுகின்றது எனக் காட்டும் காப்பு செயல்நிறைவேற்றுகைச் சுட்டிகள் மற்றும் இலக்குகளினதும் அமுலாக்கம் மற்றும் பேணுகை மூலம் எய்தப்பட முடியும்.*

*(ஈ) (2) பணிப்பாளர் தலைமையதிபதி, காப்பு அபாயங்களை முகாமை செய்வதற்கும் காப்பு பற்றிய பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பயனுடைமையை மதிப்பீடு செய்வதற்கு செய்முறையொன்றை அபிவிருத்தி செய்தலும் பேணுதலும் வேண்டும்.*

*குறிப்பு.- காப்பு மதிப்பீட்டுப் பெறுபேறுகள், காப்பு அபாயங்களை முகாமை செய்வதற்கான செயற்பாடுகளுக்கு முன்னுரிமையளிக்க ஆதரவளிப்பதற்கு பயன்படுத்தப்படலாம்.*

*(ஈ) (3) பணிப்பாளர் தலைமையதிபதி, காப்பு செயல் நிறைவேற்றுகையின் ஒட்டுமொத்த மட்டத்தில் தனியாள் காமுமு இனைப் பேணுவதற்கு அல்லது தொடர்ச்சியாக சீராக்குவதற்கு தனியாள் காமுமு இன் பயனுடைமையை மதிப்பிடுதல் வேண்டும்.*

***அரச காப்பு ஊக்குவிப்பு***

*உள்ளக தொடர்பாடல் மற்றும் காப்புத் தகவலைப் பரப்புதல்*

*பணிப்பாளர் தலைமையதிபதி, பயனுள்ள அகாநி ஒன்றினைப் பேணிக்காக்கும் ஆக்கபூர்வமான காப்புக் கலாசாரமொன்றின் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கு அரச வான்செலவு ஒழுங்கமைப்புகளினுள் காப்பு விழிப்புணர்வு மற்றும் காப்புத் தகவலைப் பகிர்தல் மற்றும் பரிமாற்றுதலை மேம்படுத்துதல் வேண்டும்.*

*வெளியகத் தொடர்பாடல் மற்றும் காப்புத் தகவலைப் பரப்புதல்*

*பணிப்பாளர் தலைமையதிபதி, காப்பின் பேணுகை மற்றும் சீராக்கலை பேணிக்காக்கும் ஆக்கபூர்வமான காப்புக் கலாசாரமொன்றின் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கும் வான்செலவு சமுதாயத்துடன் காப்பு விழிப்புணர்வு மற்றும் காப்புத் தகவலைப் பகிர்தல் மற்றும் பரிமாற்றுதலை மேம்படுத்துதல் வேண்டும்.*

***குறிப்பு**.- காப்பு விழிப்புணர்வை மேம்படுத்தலானது, வான்செலவு சமுதாயத்திற்கான அணுகத்தக்க காப்புப் பயிற்சியை அடையாளம் காணுதலை உள்ளடக்கக்கூடும்.*

**இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்காக-**

*"பின்னிணைப்பு - 1" என்பது, சமவாயத்திற்கான ஆளணியினர் உரிமமளித்தல் பற்றிய பின்னிணைப்பு - 1 இன் புழக்கத்திலுள்ள பதிப்பு எனப் பொருள்படும்.*

*"பின்னிணைப்பு - 6" என்பது, சமவாயத்திற்கான வானூர்தி தொழிற்பாடு பற்றிய பின்னிணைப்பு - 6 இன் புழக்கத்திலுள்ள பதிப்பு எனப் பொருள்படும்.*

*"பின்னிணைப்பு - 8" என்பது, சமவாயத்திற்கான வானூர்தியின் பறத்தகு நிலை பற்றிய பின்னிணைப்பு - 8 இன் புழக்கத்திலுள்ள பதிப்பு எனப் பொருள்படும்.*

*"பின்னிணைப்பு - 14" என்பது, சமவாயத்திற்கான வானூர்தி நிலையங்கள் பற்றிய பின்னிணைப்பு - 14 இன் புழக்கத்திலுள்ள பதிப்பு எனப் பொருள்படும்.*

*"பின்னிணைப்பு - 19" என்பது, சமவாயத்திற்கான காப்பு முகாமைத்துவம் பற்றிய பின்னிணைப்பு - 19 இன் புழக்கத்திலுள்ள பதிப்பு எனப் பொருள்படும்.*

**அட்டவணை II**

*காப்புத் தரவு மற்றும் காப்புத் தகவல் சேகரிப்பு, பகுப்பாய்வு, பாதுகாப்பு, பகிர்தல் மற்றும் பரிமாற்றல்*

*(அ) பணிப்பாளர் தலைமையதிபதி, காப்புத் தரவு மற்றும் காப்புத் தகவலின் பகுப்பாய்வை பற்றுவதற்கும், தேக்கிவைப்பதற்கும், கூட்டித்தொகுப்பதற்கும் அதனை இயலச்செய்வதற்கும் ஆன (இதனகத்துப்பின்னர் "காதசேசெமு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) காப்புதரவுச் சேகரிப்பு மற்றும் செய்முறைப்படுத்தல் முறைகளைத் தாபித்தல் வேண்டும்.*

***குறிப்பு 1** : காதசேசெமு ஆனது, பின்வருவன உட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் செய்முறைப்படுத்தல் மற்றும் அறிக்கையிடல் முறைமைகள், காப்புத் தரவுத்தளங்கள், தகவல் மற்றும் பதிவு செய்யப்பட்ட தகவலைப் பரிமாற்றுவதற்கான திட்டங்களைக் குறிப்பீடு செய்கின்றது :*

*(அ) விபத்து மற்றும் சம்பவம் பற்றிய புலனாய்வுகள் தொடர்பான தரவு மற்றும் தகவல் ;*

*(ஆ) அரச அதிகாரசபைகள் அல்லது வான்செலவு சேவை வழங்குநர்களினாலான காப்பு புலனாய்வுகள் தொடர்பான தரவு மற்றும் தகவல் ;*

*(இ) 'ஆ' இல் சுட்டிக்காட்டப்பட்டவாறு கட்டாய காப்பு அறிக்கையிடும் முறைமைகள் ;*

*(ஈ) 'இ' இல் சுட்டிக்காட்டப்பட்டவாறு தன்னிச்சையான காப்பு அறிக்கையிடும் முறைமைகள் ; அத்துடன்*

*(உ) பின்னிணைப்பு 6, பாகம் I, அத்தியாயம் 3 இல் விவரிக்கப்பட்டவாறு தன்னியக்க தரவு பற்றல் முறைமைகள் உள்ளடங்கலாக சுய வெளியிடுகை அறிக்கையிடும் முறைமைகளுடன் சுயமுனைவு தரவு பற்றல் முறைமைகள் ;*

*ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய தரவு அல்லது தகவலைப் பரிமாறுதல் அல்லது பரப்புதல் பின்னிணைப்பு 13 இன்கீழ் தடைசெய்யப்படாதிருக்கும்.*

***குறிப்பு 2** : "காப்புத் தரவுத்தளம்" என்ற பதமானது தனியான தரவுத்தளம் ஒன்றை அல்லது பல தரவுத்தளங்களைக் குறிப்பீடு செய்யும்.*

***குறிப்பு 3** : காதசேசெமு ஆனது, அரசு, கைத்தொழில் மற்றும் பகிரங்க மூலங்களிலான உள்ளீடுகளை உள்ளடக்கலாம் என்பதுடன் காப்புத்தரவு மற்றும் காப்புத்தகவல் சேகரிப்பின் எதிர்விளைவான மற்றும் சார்மறையான முறைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம்.*

***குறிப்பு 4** : துறை குறித்த காப்பு அறிக்கையிடும் ஏற்பாடுகள், வேறு பின்னிணைப்புகள், வாஓசேந மற்றும் பிகுந இல் உள்ளடங்குகிறது. எல்லா மூலங்களிலிருந்தும் தரவு மற்றும் காப்புத் தகவலை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வுக்கான ஒன்றிணைந்த அணுகுமுறையொன்றைக் கொண்டிருப்பதில் காமுமு ஒன்றின் பயனுள்ள அமுலாக்கத்திற்கு ஏற்றங்கீகரிக்கப்பட்ட நன்மையொன்று உள்ளது.*

*(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி, சம்பவங்களை அறிக்கையிடுதலை உள்ளடக்கும் கட்டாய முறையிலான காப்பு அறிக்கையிடும் முறைமையொன்றைத் தாபித்தல் வேண்டும்.*

*(இ) பணிப்பாளர் தலைமையதிபதி, கட்டாய முறையிலான காப்பு அறிக்கையிடும் முறைமைகளினால் கவரப்படாத காப்புத்தரவு மற்றும் காப்புத் தகவலைச் சேகரிப்பதற்கு தன்னிச்சையான காப்பு அறிக்கையிடும் முறைமையொன்றைத் தாபித்தல் வேண்டும்.*

*(ஈ) இலங்கை வானூர்தி விபத்துப் புலனாய்வு அதிகாரசபை உள்ளடங்கலாக, பணிப்பாளர் தலைமையதிபதி, பின்னிணைப்பு - 19 இல் உள்ள நெறிகளுக்கிணங்க அவரது காப்புப் பொறுப்புக்களுக்கு ஆதரவளிப்பதற்கு காதசேசெமு இற்கான அணுக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*(உ) காப்புத் தரவுத்தளம், காப்புத்தகவல் பகிர்வு மற்றும் பரிமாற்றத்துக்கு வசதியளிப்பதற்கு செந்தகைமைப்படுத்திய வகைப்பாட்டியலைப் பயன்படுத்துதல் வேண்டும்.*

***குறிப்பு** : பணிப்பாளர் தலைமையதிபதி, விசதஅ - ஒத்துப்போகக்கூடிய முறைமையொன்றைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்.*

**காப்புத் தரவு மற்றும் காப்புத்தகவல் பகுப்பாய்வு**

பணிப்பாளர் தலைமையதிபதி, காதசேசெமு மற்றும் இணைந்த காப்புத் தரவுத் தளங்களிலிருந்து காப்புத் தரவு மற்றும் காப்புத் தகவலைப் பகுப்பாய்வு செய்வதற்கு செய்முறையொன்றைத் தாபித்தலும் பேணுதலும் வேண்டும்.

**குறிப்பு 1** : பணிப்பாளர் தலைமையதிபதியினால் புரியப்படும் காப்புத் தரவு மற்றும் காப்புத் தகவல் பகுப்பாய்வின் நோக்கம், தனியாள் சேவை வழங்குநர்கள் மற்றும் தொழிற்படுத்துநர்களின் காப்புத் தரவுப் பகுப்பாய்வு செய்முறைகளினால் மற்றபடிக்கு அடையாளம் காணப்படமுடியாமல் இருக்கக்கூடிய முறைமைசார்ந்த மற்றும் குறுக்குவெட்டான ஆபத்துக்களை அடையாளம் காணுதலாகும்.

**குறிப்பு 2** : செய்முறை, காப்புத் தரவுப் பகுப்பாய்வின் முன்னறிவிக்கும் முறைகளை உள்ளடக்கலாம்.

**காப்புத் தரவு மற்றும் காப்புத் தகவல் பாதுகாப்பு**

(அ) (1) அதிகாரசபை, பின்னிணைப்பு – 19 இற்கு இணங்க தன்னிச்சையான காப்பு அறிக்கையிடும் முறைமையினாலும் தொடர்பான மூலங்களினாலும் கவரப்பற்றப்பட்ட காப்புத் தரவுக்கும் அவைகளிலிருந்து பெறப்பட்ட காப்புத் தகவலுக்கும் பாதுகாப்பு அளித்தல் வேண்டும்.

**குறிப்பு** : மூலங்கள் தனியாட்கள் மற்றும் ஒழுங்கமைப்பை உள்ளடக்குகிறது.

(அ) (2) அதிகாரசபை, கட்டாய முறையிலான காப்பு அறிக்கையிடும் முறை மற்றும் தொடர்பான மூலங்களினாலும் கவரப்பற்றப்பட்ட காப்புத் தரவுக்கும் அவைகளிலிருந்து பெறப்பட்ட காப்புத் தகவலுக்கும் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பாதுகாப்பை நீடித்தல் வேண்டும்.

**குறிப்பு** : ஊழியர்கள் மற்றும் தொழிற்பாட்டுசார் ஆளணியினரின் பயிற்சி மற்றும் அனுபவத்துடன் ஏற்றாகவிருக்கின்ற அவர்களது நடவடிக்கைகள் அல்லது விட்டுவிடுகைகள் தண்டிக்கப்பட மாட்டாது என அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கக்கூடிய அறிக்கையிடும் சூழல் ஒன்று காப்பான அறிக்கையிடுதலுக்கு அடிப்படையானதாகவுள்ளது.

(அ) (3) காப்பைப் பேணுதல் அல்லது சீராக்குதல் தவிர்ந்த நோக்கங்களுக்காக பந்திகள் அ மற்றும் ஆ இற்கு இணங்க சேகரிக்கப்பட்ட, தேக்கிவைக்கப்பட்ட அல்லது பகுப்பாய்வுசெய்யப்பட்ட காப்புத்தரவு அல்லது காப்புத் தகவல், விதிவிலக்கு நெறியொன்று ஏற்புடையதாகின்றதென தகுதிவாய்ந்த அதிகாரி தீர்மானித்தால் ஒழிய கிடைக்கக்கூடியதாக ஆக்கப்படுதல் ஆகாது அல்லது பயன்படுத்தப்படுதலாகாது.

(அ) (4) பந்தி 'இ' எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி, வான்செலவுக் காப்பைப் பேணுவதற்கு அல்லது சீராக்குவதற்கு அவசியமான திருத்த அல்லது பரிகரிப்பு நடவடிக்கையை எடுப்பதிலிருந்து தடைசெய்யப்படுதலாகாது.

(அ) (5) பணிப்பாளர் தலைமையதிபதி, ஆக்கபூர்வமான காப்புக் கலாசாரம் ஒன்றின் மேம்படுத்தல் உள்ளடங்கலாக, பந்தி 'ஆ' மற்றும் 'இ' இல் குறிப்பீடு செய்யப்பட்ட முறைமைகள் ஊடாக காப்பு அறிக்கையிடுதலை ஊக்குவிப்பதற்கு அவசியமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

(அ) (6) பந்தி 'இ' இல் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக, அதிகாரசபை பின்னிணைப்பு – 19 இல் கூறப்பட்டவாறு வான்செலவு காப்பு பொறுப்பிக்கப்பட்ட அரச உருவகங்களுக்கும் நீதி நிருவாகம் பொறுப்பிக்கப்பட்டவற்றிற்கும் இடையில் தோதான முன்கூட்டிய ஒழுங்கேற்பாடுகளை தொடக்கிவைத்தலும் பயன்படுத்தச் செய்வித்தலும் வேண்டும்.

**காப்புத் தகவல் பகிர்தல் மற்றும் பரிமாற்றம்**

(ஆ) (1) பணிப்பாளர் தலைமையதிபதி, அதன் காதசேசெமு இல் உள்ளடக்கியுள்ள தகவலின் பகுப்பாய்வில் ஏனைய அரசுகள் அக்கறை கொள்ளும் எனக் கருதப்படுகின்ற காப்பு விடயங்களை அடையாளங்கண்டால், பணிப்பாளர் தலைமையதிபதி, பின்னிணைப்பு 13 இன்கீழ் அத்தகைய தரவு மற்றும் தகவலைப் பரப்புதல் தடைசெய்யப்படாதவிடத்து மட்டும் இயன்றளவு வரை விரைவாக அவர்களுக்கு அத்தகைய காப்புத் தகவலை அனுப்பிவைத்தல் வேண்டும். அத்தகைய தகவலைப் பகிர்வதற்கு முன்னர், பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் அவ்வவ் அரசு காப்புத் தகவல் பகிரப்படவேண்டிய பாதுகாப்பு மற்றும் நிபந்தனைகளின் மட்டத்தின்மீது உடன்படுதல் வேண்டும். பாதுகாப்பு மற்றும் நிபந்தனைகளின் மட்டம் பின்னிணைப்பு – 19 இற்கு இணங்கவிருத்தல் வேண்டும்.

(ஆ) (2) பணிப்பாளர் தலைமையதிபதி, வான்செலவு முறைமைப் பயன்பாட்டாளருக்கு மத்தியில் காப்புத் தகவல் பகிர்தல் அல்லது பரிமாற்றல் வலையமைப்புக்களைத் தாபித்தலை மேம்படுத்தல் வேண்டும் என்பதுடன் தேசிய சட்டம் வேறுவகையாக ஏற்பாடு செய்தாலோ ஒழிய காப்பு மற்றும் தகவலைப் பகிர்தல் மற்றும் பரிமாற்றலுக்கு வசதியளித்தலும் வேண்டும்.

**இவ்வட்டவணையின் நோக்கங்களுக்காக -**

"விசதஅ" என்பது, விபத்து அல்லது சம்பவ தரவு அறிக்கையிடுகை எனப் பொருள்படும் ;

"பின்னிணைப்பு - 6" என்பது, சமவாயத்திற்கான வானூர்தி தொழிற்படுத்துகை பற்றிய பின்னிணைப்பு - 6 இன் புழக்கத்திலுள்ள பதிப்பு எனப் பொருள்படும்.

"பின்னிணைப்பு - 13" என்பது, சமவாயத்திற்கான வானூர்தி விபத்து மற்றும் சம்பவ புலனாய்வு பற்றிய பின்னிணைப்பு - 13 இன் புழக்கத்திலுள்ள பதிப்பு எனப் பொருள்படும்.

"பின்னிணைப்பு - 19" என்பது, சமவாயத்திற்கான காப்பு முகாமைத்துவம் பற்றிய பின்னிணைப்பு - 19 இன் புழக்கத்திலுள்ள பதிப்பு எனப் பொருள்படும்.

"வாஒசேந" என்பது, வான்ஓட்டுச் சேவை நடவடிக்கைமுறைகள் எனப் பொருள்படும் ; அத்துடன்

"பிகுந" என்பது, பிராந்திய குறைநிரப்பு நடவடிக்கைமுறைகள் எனப்பொருள்படும்.

04-710